

பெஞ்சல் புயல் காரணமாக சென்னையில் 200 இடங்களில் மருத்துவ முகாம் நடைபெறும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க 01.12.2024 ஞாயிற்றுக்கிழமை சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதியில் 172 வது வார்டு மடுவின்கரை மசூதி காலனி பகுதியிலும் 168வது வார்டு சைதாப்பேட்டை வி.ஜி.பி. சாலை பகுதியிலும் 169வது வார்டு சின்னமலை சத்யா நகர் பகுதியிலும் 170வது வார்டு கோட்டூர் வரதாபுரம் பகுதியிலும் நடைபெற்ற மருத்துவ முகாம்களை பகுதி கழக செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரயணியன் ஆய்வு செய்தார். நிகழ்ச்சியில் பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள் க.மணி, கோட்டூர்புரம் சண்முகம், எஸ்.பாட்சா, எல்.ஆரோக்கியராஜ், வே.முருகன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்

## நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை

# ரூ.5 கோடியில் இருந்து 10 கோடியாக அறிவிக்க ஏதேனும் திட்டம் உள்ளதா?

## ஒன்றிய அரசிடம் – வேலூர் டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி. கேள்வி!

புதுடெல்லி, டிச. 2 -

நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியை ஆண்டுக்கு ரூ.5 கோடியில் இருந்து ரூ.10 கோடியாக அதிகரிக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? மக்களவையில் வேலூர் மக்களவைத் தொகுதி கழக எம்.பி. டி.எம்.கதிர் ஆனந்த் எழுத்து மூலமாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.



அதன் விவரம் வருமாறு:-

டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி.: நாடு முழுவதும் MPLAD திட்டத்தின் செயல்பாட்டை ஒன்றிய அரசு மதிப்பாய்வு செய்ததா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை? தற்போது கட்டடப் பொருட்களின் விலை அதிகரிப்பு, தொழிலாளர்களின் ஊதிய உயர்வு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுப் பணிகளை முடிக்க ஆண்டுக்கு 5 கோடி போதுமானதாக இல்லை என்பதை அரசு அறிந்திருக்கிறதா? நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டு நிதியை ஆண்டுக்கு ரூ.5 கோடியில் இருந்து ரூ.10 கோடியாக அதிகரிக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா? இருந்தால் அதன் விவரம் என்ன?

அத்தகைய முன் மொழிவு ஏதேனும் நிதி அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதா? அப்படியானால் அதன் விவ ரங்கள்? இல்லையென்றால் அதற்கான காரணங்கள் என்ன?

ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சர் ராவ் இந்தர்ஜித் சிங் எழுத்துப் பூர்வமாக அளித்த பதில் விவரம்:

நாடு முழுவதும் உள்ள 216 மாவட்டங்களில் 01-04-2014 முதல் 31-03-2019 வரையிலான காலகட்டத்தில் முடிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழான பணிகளின் மூன்றாம் தரப்பு மதிப்பீட்டை அமைச்சகம் நடத்தியது. 2021-ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்டது மற்றும்

31-8-2021 அன்று இறுதி அறிக்கையைச் சமர்ப்பித்தது.

நிதி அமைச்சகத்துடன் கலந்தாலோசித்து உரிய நடைமுறையைப் பின்பற்றி நிதி உரிமையை மறுபரிசீலனை செய்வதற்கான ஆலோசனைகள் உட்பட சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து புதிய பரிந்துரைகளை அமைச்சகம் தொடர்ந்து பெற்று ஆய்வு செய்கிறது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.



ஃபெஞ்சல் புயல் காரணமாக ஆதவப்பாக்கம் மற்றும் கருவேப்பம்பூண்டி ஆகிய கிராமங்களில் உள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள 150க்கும் மேற்பட்ட இருளர் இன மக்களுக்கு அத்தியாவசிய நிவாரண பொருட்களான பாய்,போர்வை, பிரெட், பிஸ்கட் மற்றும் உணவுகளை காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர் க.சுந்தர் வழங்கி தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.பின்னர்,இருளர் இன மக்களுக்காக நடைபெறும் மருத்துவ முகாமினை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.இதில் ஒன்றிய செயலாளர் ஞானசேகரன், பேரூர் செயலாளர் பாரி வள்ளல், பேரூராட்சி மன்றத் தலைவர் சசிகுமார், பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் இளமதி கோவிந்தராஜ், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஒன்றிய மற்றும் கிளை நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.

# ஃபெஞ்சல் புயல் : 7 மாவட்டங்களில் 500 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

**சென்னை, டிச. 02**

**மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று பொது மக்களுக்கு நோய்த்தொற்று பாதிப்புகள் ஏற்படாமல் இருக்க, அடையாறு மண்டலம், வார்டு 172, மடுவின்கரையில் நடைபெறும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்தார்.**

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

நேற்று நள்ளிரவு கரையை கடந்திருக்கும் பெஞ்சல் புயல் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் நிலை இருந்தது. கடந்த காலங்களில் ஏற்பட்ட புயல் பாதிப்புகள் மக்களுக்கு பெரிய அச்சநிலையை ஏற்படுத்தி வந்தது. ஆனால் முதலமைச்சர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக மிகப் பெரிய அளவிலான பாதிப்புகள் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

வரலாற்றில் இல்லாத வகையில் 50 செமீ மழை 24 மணி நேரத்தில் குறிப்பாக விழுப்புரம், மயிலம், கிளியனூர் போன்ற பல்வேறு பகுதிகளில் பொழிந்திருக்கிறது. ஆனால் பாதிப்பு அளவுகள் என்று எடுத்துக்கொண்டால் சென்னையாக இருந்தாலும் சரி, விழுப்புரமாக இருந்தாலும், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் போன்ற பல்வேறு மாவட்டங்களில் மழைப்பொழிவு கூடுதலாக இருந்தாலும் கூட பாதிப்புகள் பெரிய அளவில் இல்லா மல் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் நேற்று புயல் பாதிப்புகள் இருந்தாலும், வட சென்னையின் பல்வேறு பகுதிகளுக்கு நேரிடையாக சென்று ஆய்வு செய்து கட்டுப்பாட்டு அறையைக் கண்காணித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்கள். தொடர்ந்து துணை முதலமைச்சர் அவர்களும், பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டு அறைகளும், வடசென்னையில் பல்வேறு பகுதிகளுக்கு நேரிடையாக சென்று பணிகளை முடிக்கி விட்டு புயல் வெள்ள நிவாரணை பணிகளை விரைந்து செயல்படுத்திட உத்தரவிட்டார்கள்.

மேலும் அக்டோபர் மாதம் 14ந் தேதி சென்னையில் பெரிய அளவில் மழை பொழியும் என்று சொல்லப்பட்ட நிலையில் 1700 மோட்டார் இயந்திரங்கள் சென்னை மாநகராட்சி சார்பில் அனைத்து இடங்களிலும் வைக்கப்பட்டது. முதலமைச்சர் அவர்கள் வடகிழக்கு பருவமழை முடிகின்ற வரையில் 1700 மோட்டார் இயந்திரங்கள் எங்கெயெல்லாம் வைக்கப்பட்டதோ அங்கேயே இருக்க வேண்டும் என்கின்ற வகையில் அவைகள் அங்கேயே இருந்தது,அதன்விளைவாக நேற்றைக்கு மழை பொழிய மோட்டார் மூலம் மழைநீரை வடிக்கும் பணிகளும் வேகமாக நடைபெற்று வந்தது. 20 செமீ மழை பொழிவில் சென்னையில் உள்ள சுரங்கப் பாதைகள் பெரிய அளவில் மூடப்பட்டிருக்கும்.

ஆனால் தற்போது சென்னையில் உள்ள 22 சுரங்க ப்பாதைகளில் கணேசபுரம் சுரங்கப்பாதை மட்டும் இரயில்வே மேம்பாலம் பணிகள் நடைபெற்று கொண்டிருக்கும் காரணத்தினால் தற்காலிகமாக மூடி வைக்கப்பட்டிருக்கிறது. மழை நீரினால் மூடி வைக்கப்பட்டிருக்கும் சுரங்கப்பாதை தியாகராயர் நகரில் உள்ள மேட்லி சுரங்கப்பாதை மட்டுமே. மற்ற 20 சுரங்கப்பா தைகளும் பெரிய அளவில் மழை பெய்திருந்தாலும் கூட போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்கு மழை பெய்திருந்த நேரத்திலும் கூட ஆய்வுகள் மேற்கொண்டிருந்த போது மழை பொழிவு அதிகமாக உள்ள மாவட்டங்களில் மழைக்கால சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவித்திருந்தார்கள்.

### ஏரி கொள்ளளவு

சென்னையைப் பொறுத்தவரை ஒட்டுமொத்தமாக குடிநீர் ஆதாரம் செங்குன்றம் ஏரியாக இருந்தாலும், புழல் ஏரியாக இருந்தாலும், செம்பரம்பாக்கம் ஏரியாக இருந்தாலும், சோழவரம் ஏரியாக இருந்தாலும், சேர்வராயன் கண்டிகையாக இருந்தாலும் இந்த இடங்களில் தேக்கி வைக்கப்படுகின்ற ஒட்டுமொத்த குடிநீரின் அளவு 11.50 மில்லியன் கன அடி, டிஎம்சி ஆகும். தற்போது 7 டிஎம்சி அளவில் மட்டுமே நீர் உள்ளது. செம்பரம்பாக்கம் ஏரி என்பது 3.6 டிஎம்சி தேக்கி வைக்கக்கூடிய கொள்ளளவு கொண்ட பெரிய ஏரி. செம்பரம்பாக்கம் ஏரியின் உபரி நீர் தான் சைதாப்பேட்டை, விருகம்பாக்கம், ஆலந்தூர், தாம்பரம், மயிலாப்பூர், வேளச்சேரி போன்ற பல்வேறு பகுதிகளில் இருக்கின்ற அடையாற்றங்கரையோரம் உள்ள மக்களுக்கு பாதிப்புகள் ஏற்படுத்தும்.

ஆனால் செம்பரம்பாக்கம் ஏரியின் தற்போதைய குடிநீர் இருப்பு 2.6 டிஎம்சி. அதனுடைய ஒட்டுமொத்த கொள்ளளவு 3.6 டிஎம்சி. இன்னும் 1 டிஎம்சி தண்ணீர் செம்பரம்பாக்கம் ஏரிக்கு தேவை. இன்னமும் மழை வந்தால்தான் எதிர்காலத்தில் குடிநீர் பஞ்சம் இல்லாமல் வறட்சி இல்லாமல் இருக்கும். எனவே செம்பரம்பாக்கம் ஏரியாக இருந்தாலும் சோழவரம் ஏரியாக இருந்தாலும், ரெட்ஹில்ஸ் ஏரியாக இருந்தாலும் அனைத்து ஏரிகளிலும் இதுபோன்ற நிலைதான் இருக்கின்றது. எனவே இந்த மழை என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றுதான்.

தமிழ்நாட்டின் வடகிழக்கு பருவமழையைப் பொறுத்தவரை 44 செமீ என்று சொல்லப்படுகிறது. ஆனால் 20 செமீ ஒரே நாளில் பொழிந்திருப்பது என்பது அதிகபட்ச அளவிலான மழைதான், என்றாலும் பாதிப்புகள் இன்றைக்கு பெரிய அளவில் குறைந்திருக்கிறது. வேளச்சேரியைப் பொறுத்தவரை ஒவ்வொரு மழைக்கும் வெள்ளச்சேரி என்கின்ற அளவில் தான் பாதிப்புகளுக்கு உள்ளாகும். இன்றைக்கு முதலமைச்சர் அவர்களால் அங்கே நீர்நிலை உருவாக்கும் பணிகள் மிகச்சிறப்பாக நடைபெற்று வரும் காரணத்தினால் வேளச்சேரி பகுதிகளில் 90% பகுதிகள் மழைநீர் இல்லாமல் வடிந்தது.



அதேபோல் மடிப்பாக்கம், புழுதிவாக்கம், பள்ளிக்கரணை போன்ற பகுதிகளில் நாராயணபுரம் ஏரியிலிருந்து உபரிநீரை வெளியேற்றுவதற்கு தற்காலிக கால்வாய் ஒன்றினை கடந்த அக்டோபர் மாதம் 2வது வாரத்தில் ஏற்படுத்தியதன்காரணமாக 1000 கனஅடி நீர் தொடர்ந்து வெளியேற்றப்பட்டு வருகிறது. அப்படி நீர் வெளியேற்றும் காரணத்தினால் குடியிருப்புகளில் மழைநீர் புகாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு பணிகள் செய்யப்பட்டிருக்கிறது.

சைதை குறிப்பாக கிண்டி ரேஸ் கோர்ஸில் நான்கு புதிய நீர்நிலைகள் உருவாக்கப்பட்டு 4.6 மில்லியன் கன அடி அளவிற்கு தண்ணீர் தேங்கியிருக்கின்றது. இந்த அளவிற்கு பல்வேறு பணிகள் செய்திருக்கும் காரணத்தினாலும் புதிய மழைநீர் வடிகால்களை அதிக கி.மீ அளவிற்கு அமைத்த காரணத்தினாலும் 5 அல்லது 6 மணிநேரத்திலேயே சகஜ நிலைக்கு திரும்பியிருக்கிறது. வேளச்சேரியில் இருக்கின்ற வீராங்கல் ஓடை இதற்கு முன்னாள் பொ துப்ப ணித்துறை நிர்வகித்து வந்தது.

முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு இந்த ஓடையும், விருகம்பா க்கம் ஓடை போன்றவற்றையும் மாநகராட்சி நிர்வகிப்பதற்கு தந்திருக்கிறார்கள். அந்தவகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, வீராங்கல் ஓடையைப் பொறுத்தவரை கரையைப் பலப்படுத்தி, ஏற்கெனவே கான்கிரிட் கரையாக அமைக்கப்பட்டிருந்தது, இந்தக் கரையை உயர்த்தும் பணிகள் நடைபெறவிருக்கிறது.

எனவே அடுத்தடுத்த ஆண்டுகளில் வீராங்கல் ஓடைகளில் ஏற்படுகின்ற சிறிய அளவிலான பாதிப்புகள் கூட வரும் ஆண்டுகளில் இருக்காது. அந்தவகையில் நிர்வாகத்திறன் மிக்க முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த பணிகள் வேகமாக முடிவிற்கு வந்திருக்கிறது. இன்று 500 மருத்துவ முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. வடகிழக்கு பருவமழை முடியும் வரை மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடைபெறும். சென்னை நீங்கலாக மழை தொடர்ந்து பெய்து வரும் திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் 300 மருத்துவ முகாம்கள் நடத்த துறை திட்டமிட்டிருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, மண்டலக்குழுத்தலைவர் ஆர்.துரைராஜ், மரு.எம்.ஜெகதீசன் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## கோவை மாநகர் மாவட்ட இளைஞரணி முன்னாள் அமைப்பாளர்

# கோ.மோகன் குமார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

கோவை, டிச. 2 -

கோவை மாநகர் மாவட்டம் 69வது வட்ட அவைத்தலைவர் முன்னாள் 34வது வார்டு மாமன்ற உறுப்பினர் முன்னாள் கோவை மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான கோ. மோகன்குமார் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



மறைவு செய்தி அறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.


# சென்னைத் தெற்கில் ஒரு மாதம் முழுவதும்

# “உதயநிதியின் உதயநாள்” விழா

## 364 சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும்
## 182 பிறந்தநாள் கூட்டங்களின் “இன்றைய நிகழ்ச்சிகள்”



02.12.2024 - திங்கட்கிழமை

| வ.எண் | சொற்பொழிவாளர்கள் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 1. | சேர்காடு கென்னடி<br>மு.செந்தூர் பாண்டி | 169 வட்டம், LDG ரோடு, சின்னமலை, சைதாப்பேட்டை கிழக்கு பகுதி. | இரா.தமிழ்வாணன்<br>வட்ட து.செயலாளர் |
| 2. | குடியாத்தம் புவியரசி<br>தி.கோகுல் | 137 அ வட்டம் – அய்யாவுபுரம், கலைஞர் நகர் தெற்கு பகுதி, விருகம்பாக்கம். | சரவணன்,இளைஞர் அணி ப.து.அமைப்பாளர் |
| 3. | ஓசூர் பாரி<br>செ.ஜோதி | 175 அ வட்டம், நீதியரசர் ராமகிருஷ்ணன் ரோடு, டாக்டர் அம்பேத்கர் நகர், வேளச்சேரி மேற்கு பகுதி. | வி.சக்திவேல்<br>வட்டச் செயலாளர் |
| 4. | இளஞ்செழியன்<br>ர.ஜெயகுமரேஷ் | 190 வட்டம், கண்ணபிரான் கோயில் தெரு, பெருமாள் கோவில் சந்திப்பு, சோழிங்கநல்லூர் மத்திய பகுதி. | எஃப்.ஆரோன் அரசு<br>வட்டச் செயலாளர் |
| 5. | விஜயரத்தினம்<br>ஐ.அன்றோ வளர்பிரட்டன் | 148 வட்டம் – சீ.டி.என் நகர், மதுரவாயல் தெற்கு பகுதி | மேட்டுக்குப்பம் S.ரமேஷ்ராஜ்<br>வட்டச்செயலாளர் |
| 6. | ஆடுதுறை உத்திராபதி<br>கு.ஹரிசங்கர் | 92 வட்டம் - 7H பேருந்து நிலையம், முகப்பேர் கிழக்கு, மதுரவாயல் வடக்கு பகுதி | எம்.எம்.ஜெயரத்தினம்<br>வட்டச் செயலாளர் |

AK DIGITAL PRINTING 9444129952

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்போர் :

மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அளவிலான அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கழகத் தோழர்கள் பெருந்திரளாக இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.**

அன்புடன் : அமைச்சர் மா.சுப்பிரமணியன் B.A., LL.B.,
மாவட்ட கழக செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.